# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 30 Sep 2017 Issue - 9


ஆசிரியர் உரை

## பேசாதவனின் பிரசங்கம்

விசுவாச வீரர்களின் பட்டியலை ஏந்தி நிற்கும் எபிரெயர் நிருபம், ஏராளமான நீதிமான்களின் விசுவாச வாழ்க்கையை எடுத்துக் கொடுக்கிறது. இப்பட்டியலில் இடம் பெறாத, யோபு போன்ற வேறு சில தேவ மனிதர்களும் உண்டு. ஆனால், அவர்கள் எல்லோரைக் காட்டிலும் அல்லது அவர்கள் எல்லோருக்குள்ளும் ஒரே ஒருவனை வேதாகமம் வேறுபடுத்திக் காட்டுகிறது. இத்தனைக்கும், அவன் தனது வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசினதாக வேதாகமம் எங்கும் காணோம். கர்த்தருடனோ அல்லது தனது குடும்பத்தாருடனோ எதுவும் பேசினதாகக் கூட குறிப்படவில்லை. இவன் வாழ்வு பற்றி ஒரு சில வசனங்களே வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. (ஆதி. 4:1-8).

இருப்பினும், இவன் எல்லோருக்குள்ளும் சிறந்தவன் என்ற பரிசுத்த ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டுள்ளான். இவனைப் பற்றி எபிரெயர் ஆசிரியர் இவ்விதம் கூறுகிறார். " விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமான் என்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்." (எபி. 11:4).

எத்தனையோ நீதிமான்கள் வேதாகமத்தில் உண்டு. ஆபேலைப் பற்றிப் பேசிப் பிரசங்கிப்பது போலவே இவர்களைப் பற்றியும் நாம் பேசிப் பிரசங்கிக்கிறோம். ஆனால், அவர்களனைவருக்கும் ஆபேலுக்கும்

அடிப்படையில் ஒரு வேறுபாடு உண்டு. அவர்கள் மரித்தபின் பேசப்படுகிறார்கள். இவனோ மரித்த பின் பேசிக் கொண்டிருக்கிறான். இது என் கருத்தல்ல. வேதாகமம் தெள்ளத் தெளிவாக வலியுறுத்திக் கூறும் ஒன்று.

விசுவாசதிற்காக வாழ்ந்து, விசுவாசத்திற்காக பாராட்டுப் பெற்று, விசுவாசத்திற்காக அங்கீகரிக்கப்பட்டு, விசுவாசத்திற்காக மரித்த முதல் மனிதன் இவன் தான். குடும்பத்தில் பிறக்கும் தலைப்பிள்ளைக்கு பெற்றோரிடம் தனிச் சிறப்பு உள்ளது போல், விசுவாசக் குடும்பத்தில், முதன் முதலாகப் பிறந்த இவனுக்கு பரிசுத்த ஆவியானவர் தனியொரு முக்கியத்துவம் தந்துள்ளார்.

சரி, இந்த சிறப்பான மனிதன் நமக்காக என்ன பேசுகிறான் என்று கவனிப்போம். இவன் பேசும் அனைத்தையும் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், நமக்குப் பிரயோஜனமாக இருக்கும் சிலவற்றை நாம் இங்கே கவனிப்போம்.

### I. "விசுவாசம்" பற்றி ஆபேலின் பிரசங்கம்

மரித்தும் பேசும் ஆபேல், நமக்குச் செய்யும் முதல் பிரசங்கம் விசுவாசம் பற்றியது. இதுபற்றிப் பேச விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம்பேற்றிருக்கும் அனைவருக்குமே தகுதியிருந்தாலும், இவரின் தகுதி அலாதியானது. நான் ஏற்கனவே சொன்னது போல, அத்தகுதியை இப்பூமியில் பெற்ற முதல் மனிதன் இவன். இவனுடைய விசுவாசத்திற்கு தேவனே சாட்சி பகிர்ந்திருக்கிறார்.

ஆபேலின் விசுவாசம் வெளியாவதற்குக் காரணமாயிருந்தது, இவனும் இவன் சகோதரனாகிய காயீனும் கொண்டு வந்த காணிக்கைகளே. ஆம், இருவரும் காணிக்கை கொண்டு வந்தது குறித்து வசனம் இவ்வாறாகக் கூறுகிறது. **...காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான். ஆபேலும், தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர்** அங்கீகரிக்கவில்லை (ஆதி. 4:3,4 ). காயீனின் காணிக்கை ஏன் தள்ளப்பட்டது, ஆபேலின் காணிக்கை ஏன் அங்கீகரிக்கப்பட்டதென்பதற்கு ஆதியாகமத்தில் போதுமான விளக்கம் இல்லாவிட்டாலும், எபிரெயரில் அதற்கு சரியான அர்த்தமும், முறையான விளக்கமும்

ஆம், அங்கே உள்ள அர்த்தம் மிகுந்த வார்த்தை, விசுவாசத்தினாலே என்பது தான். நம்முடைய தேவன் இருதயத்தைக் காணக் கூடியவர். ஒரு செயலின் முடிவை அறியக் கூடியவர். மேலும், பட்சபாதமில்லாதவர் (ரோம. 2:11). ஆகவே, காரணமில்லாமல்

அங்கீகரித்தலையும், நிராகரித்தலையும் செய்திருக்க மாட்டார். இருவருடைய செயலையும் தனது நீதியின்படியாக சீர்தூக்கிப் பார்த்தபடியால் தான், எபிரெய ஆசிரியரைக் கொண்டு, விசுவாசத்தினாலே என்ற வார்த்தையை அங்கே வெளிப்படுத்தியுள்ளார்.

அப்படியானால், ஆபேல் எதை விசுவாசித்திருப்பான்? கொஞ்சம் சிந்தனைக்குத் தீனி போட்டுப் பார்ப்போம். எதை விசுவாசித்திருக்க வேண்டும்? எந்தப் பிரசங்கமும் அந்த நாட்களில் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. அப்படியானால் எப்படி விசுவாசித்திருப்பான்? ஆம், தனக்காகக் கொண்டு வரப்படும் காணிக்கை இப்படிப்பட்டதாக இருக்கவேண்டுமென்று தேவன் நிச்சயம் அவர்களுக்கு வெளிப்படுத்தியிருப்பார். சந்தேகம் வேண்டாம். தேவன் வெளிப்படுத்தினதை இவன் விசுவாசித்துள்ளான். தேவன் எதைக் கொண்டு வரவேண்டுமேன்று சொன்னாரோ, எவ்வளவு கொண்டு வரவேண்டுமேன்று சொன்னாரோ, எப்பொழுது கொண்டு வரவேண்டுமேன்று சொன்னாரோ அவைகளையெல்லாம் அவன் அப்படியே செய்துள்ளான். ஆகவே தான், தேவ அங்கீகாரம் இவனுக்குக் கிடைத்துள்ளது.

தேவனுடைய வெளிப்பாட்டின் மீது தனக்கிருந்த விசுவாசத்தை கிரியைகளோடு நடத்திக் காட்டினான். வெறும் விசுவாசத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் காணிக்கையைக் கொண்டு வந்தான் என்று வேதம் கூறுகிறது. அவன் விசுவாசம், கிரியைகளோடும், கீழ்ப்படிதலோடும் இருந்துள்ளது. கிரியை இல்லாத விசுவாசம் செத்ததென்று யாக்கோபு ஆசிரியர் அடித்துக் கூறுகிறார். (யாக்கோபு. 2:26). ஆனால், காயீனுடைய விசுவாசம் செத்ததாக இருந்துள்ளது. தேவன் சொன்னதை விசுவாசித்துத்தான் காயீனும் காணிக்கை கொண்டு வந்துள்ளான். கிரியையும் ஓரளவு அவனிடம் இருந்தே உள்ளது. ஆனால், கீழ்ப்படிதல் அங்கே மறைந்து போய்விட்டது. நிராகரிப்புக்கு இது தான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

தேவ அங்கீகரிப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகளே, நம்முடைய நிலை எப்படியுள்ளது? ஆபேலுடைய விசுவாசப் பிரசங்கம் நமக்கு விளங்குகிறதா? நம்முடைய விசுவாசம் கிரியைகளோடும், கீழ்ப்படிதலோடும் உள்ளதா? கொஞ்சம் தற்பரிசோதனை செய்து பார்ப்போம். யாரைப்போல நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம்? கைவிடப்பட்ட காயீனைப் போலவா அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆபேலைப் போலவா?

கீழ்ப்படிதலும், கிரியையும் இல்லாத விசுவாசத்தையும், காணிக்கையையும் கர்த்தர் ஏற்றுக் கொள்ளமாட்டார். பரிசுத்த ஆவியானவர் சாமுவேலைக் கொண்டு கூறுவதைக் கவனியுங்கள். **...கர்த்தருடையசத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்.** (சாமு. 15:22). கர்த்தருக்கு எது பிரியம் என்று தெரிகிறதா?

ஆகவே, ஆபேலைப் போல தேவ அங்கீகாரத்தைப் பெறும் அனைத்து முயற்சிகளையும் நாம் எடுப்போம். தேவனுடைய சித்தம், தேவ வெளிப்பாடு ஆகியவைகளுக்கு, அதாவது வேதவாக்கியங்களுக்கு நம்மை முழுமையாக ஒப்புக் கொடுப்போம். வேத வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் அனைத்து உபதேசங்களுக்கும் நம்மை முழுமையாகக் கீழ்ப்படுத்துவோம்.

## II. **“பாடுகள்” பற்றி ஆபேலின் பிரசங்கம்.**

ஆபேல் நமக்காகச் செய்யும் அடுத்த பிரசங்கம் பாடுகள் பற்றியது. தேவனுடைய நாமத்திற்காகப் பாடு அனுபவித்த முதல் மனிதனும் இவன் தான். தன் உயிரை விடும் அளவுக்கு இவன் பாடு அனுபவித்துள்ள படியால், பாடுகள் பற்றி நமக்கெல்லாம் பாடம் கற்றுக் கொடுக்க இவன் முற்றிலும் தகுதியானவனே.

இவனுக்கு நேர்ந்த நிலையைக் குறித்து வேதம் இவ்வாறாகச் சொல்லுகிறது. “ காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான் : அவர்கள் வயல் வெளியில் இருக்கும் சமயத்தில், **காயீன், தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாக எழும்பி, அவனைக் கொலை செய்தான்** ( ஆதி. 4:8 ). காணிக்கை செலுத்தப்பட்ட நாளுக்கும், ஆபேல் கொலை செய்யப்பட்ட நாளுக்கும் இடையே எவ்வளவு காலம் இருந்ததென்று தெரியவில்லை. ஆனால், அந்த நாளிலேயே கொலை செய்யப்பட்டான் என்று வேதம் கூறவில்லை.

ஆகவே, கொலை செய்யும் அளவு மூர்க்கமடைந்திருந்த தனது சகோதரனின் கோபாவேசத்திற்கு உள்ளான நிலையில், சில நாட்களையாவது இவன் கழித்திருக்க வேண்டும். அதாவது, தேவன் தனக்குக் கட்டளையிட்டிருந்தவற்றைச் செய்ததற்காக இவன் சரீரப் பாடுகளை அனுபவித்திருக்க வேண்டும். அதன் பிறகே, இவன் கொலைக்கு ஆளாகியிருக்க வேண்டும். நான் கூறும் இக்கருத்துப்படி நடந்திருக்க வாய்ப்பில்லையென்று சொல்லிவிட முடியாது.

எப்படியோ, மரித்தும் பேசும் இம்மாமனிதன் தேவ சித்தத்தை ஒருவன் நிறைவேற்றும் போது, அல்லது நிறைவேற்ற விரும்பும் போது பாடுகளும் துன்பங்களும் உண்டு என்று அழுத்தம் திருத்தமாக நமக்குச் சொல்லியிருக்கிறார்.

வேதாகமத்தின் பிற பக்கங்களை நாம் புரட்டிப் பார்த்தாலும், இதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. யோசேப்பு, மோசே, தாவீது, எரேமியா, தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, அப்போஸ்தலன் பவுல், ஸ்தேவான் என்று அநேக தேவ மனிதர்களை நாம் ஆதாரமாகக் காட்ட முடியும். இவர்கள் ஒவ்வொருவரும் என்னென்ன பாடுகளைப் பட்டார்களென்று விபரமாய்ச் சொல்ல இங்கே இடமில்லை. இந்தப் பாடுகள் இவர்களோடு முடிந்து போகவில்லை. தொடர்ந்து நடக்குமென்றே வேதாகமம் கூறுகிறது. அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் இதை வெளிப்படுத்தியுள்ளார். **அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்க விரும்பும் யாவரும் துன்பப்படுவார்கள் ( II தீமோ. 3:12 )** என்று.

ஆகவே, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற விரும்பும் நம்முடைய வாழ்க்கையிலும் பாடுகள் இருக்கவே செய்யும். நமக்குத்தான் இந்தப்பாடுகள் என்று நினைத்து, சோர்ந்து, விசுவாசத்தில் பின் வாங்கிப் போக வேண்டாம். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ரோஜா மலர் படுக்கையல்ல. அது கல்லும், முள்ளும் நிறைந்த காட்டுப் பாதை. இந்த உண்மை தெரியாமல் கிறிஸ்தவத்தை அநேகர் ஏற்றுக் கொள்வதினால் தான், வந்த வேகத்தில் பின் வாங்கிப் போய்விடுகின்றனர்.

சந்தோஷமும், சமாதானமும், நித்திய ஜீவனும் கிறிஸ்தவத்திலே இருக்கிறதென்று வாக்குக் கொடுக்கும் அதே வேதாகமம் தான், பாடுகளும் உண்டென்று கூறுகிறது. ஒருவேளை, அந்தப் பாடுகளின் உச்சக்கட்டம் மரணமாகக் கூட இருக்கலாம். ஆபேலில் இருந்து எடுத்துக் கொண்டால் தேவனுக்காக மரித்தவர்கள் அநேகர் உண்டு. வேதாகம சரித்திரத்தில் ஒரு சிலருடைய பெயரும், பிற சரித்திரத்தில் பலருடைய பெயரும் இடம் பெற்றிருக்கிறது.

தேவ நாமத்திற்காகப் பாடுகள் படும்பொழுது தான் பரலோக பாக்கியம் பெறும் வாய்ப்பு நமக்கு அதிகமாகிறது. அவர்கள் தான் பாக்கியவான்கள் என்று அழைக்கப்படுகின்றனர். மலைப்பிரசங்கத்தில் இயேசு கிறிஸ்து இது குறித்து கூறியுள்ளார். நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்... (மத்தேயு 5:10). என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாகச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் (மத்தேயு 5:11) என்று.

ஆகவே, அருமையானவர்களே! நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் வரும் பாடுகளைக் குறித்துக் கலங்காமல், ஆபேலைப் போல தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் உறுதியாயிருந்து, ஆபேலைப் போல உயிரையே விட வேண்டியிருந்தாலும் சத்தியத்தில் நிலைத்திருப்போம். இக்காரியத்தில் நாம் ஆபேலின் பிரசங்கத்திற்குச் செவிகொடுப்போம்.

### III. **"பாடுகளுக்கான பலன்" பற்றி ஆபேலின் பிரசங்கம்.**

ஆபேலுடைய மூன்றாம் பிரசங்கம், பாடுகளுக்கான பலன் பற்றியது ஒரு வேளை, தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதினால் வரும் பாடுகளைக் கண்டு நாம் பயந்து போய், கிறிஸ்தவ ஜீவியத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து விடலாமா என்று சிந்திப்போமானால், ஆபேலின் இப்பிரசங்கம் நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தேவனுக்காக முதன் முதலாகப் பாடுகள் பட்டவன் ஆபேல் என்பதை நாம் கண்டோம். தனக்காக இரத்தம் சிந்திய ஆபேலை தேவன் மறக்கவில்லை. எபிரெய ஆசிரியரைக் கொண்டு கொடுத்த விசுவாசிகளின் பட்டியலில் இவனுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. எத்தனையோ பேர் ஆபேலுக்கு இணையாக பாடுகள் பல பட்டு தேவனுக்காக வாழ்ந்து மரித்திருந்தாலும், மரித்தும் பேசுகிறான் என்ற சிறப்புப் பட்டமும் இவனுக்குத் தான் சொந்தமாக்கப்பட்டுள்ளது.

அதாவது, ஆபேல் வாழ்ந்து, மரித்து சுமார் 4000 ஆண்டுகளுக்கும் மேலாகியும் தேவன் அவன் விசுவாசத்தையும், செயலையும் மறக்காமல், இப்பூமியில் அவனுக்கு என்ன அந்தஸ்து கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்தார். நியாயத்தீர்ப்புக்குப் பிறகு, இதைவிட மேலான அந்தஸ்து, ஆம், நித்திய ஜீவன் என்ற அந்தஸ்தும் வாடாத ஜீவ கிரீடமும் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

நம்முடைய தேவன் நீதியுள்ளவர் என்பதை நாம் அறிவோம். அவருடைய பிள்ளைகளை அவர் நிச்சயம் கைவிடமாட்டார். தன்னுடைய சீஷர்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால் கூட அதற்குண்டான பலனை அடையாமற் போகான் என்று சொல்லும் தேவன், தனக்காக ஒருவன் சரீரப் பாடுகள் பல படும்போது சும்மா விட்டுவிடுவாரா, என்ன? நிச்சயம் விடமாட்டார். ஒருவேளை பூமியின் பாடுகளை அவர் அனுமதித்தாலும், மறுமையில் வாடாத ஜீவகிரீடத்தைத் தருவார்.

முதல் நூற்றாண்டுக் காலத்தின் பிந்திய வருடங்களில் அநேக அல்லல்களுக்கு ஆட்பட்டு, சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆவியானவர் சொல்லும் போது, "**நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாக பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள், ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்** என்று கூறியுள்ளார் (வெளி. 2:10).

மேலும் அப்போஸ்தலன் பவுல் கொரிந்து சபையாருக்குச் சொல்லும் போதும், பாடுகளுக்குப் பலன் உண்டு என்றே கூறுகிறார். **ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக** (கொரி. 15:58). இன்னும் பவுல் அப்போஸ்தலன், இளைஞன் தீமோத்தேயுவுக்குச் சொல்லும் போது, **நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது...** என்று கூறுகிறார் (II தீமோ. 4:7,8).

போராட்டம் என்பதும் பாடுகள் தானே. ஒருவேளை, பாடுகள் நிறைந்த போராட்ட வாழ்கையை தேவன், பவுலுடைய வாழ்க்கையில் அனுமதித்திருந்தாலும், ஜீவ கிரீடத்தை வாக்குத்தத்தமாகக் கொடுத்துள்ளார் என்பதைக் கவனித்தீர்களா? அவருக்காகப் பாடுபடுகிறவர்களை தேவன் வெறுமனே விட்டு விடுவதில்லை. நிச்சயமாக இல்லை.

ஆகவே, எனக்கு அருமையானவர்களே! நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் நமக்கு நேரிடும் துன்பங்களையும் சோர்வுகளையும் கண்டு நாம் திடனற்றுப் போக வேண்டாம். அது எந்த வகையான பாடுகளாக இருந்தாலும் கலங்க வேண்டாம். கிறிஸ்தவ ஜீவியத்தில் முனைப்பு காட்டுவோம். ஊழியத்தை உற்சாகமாகச் செய்வோம். தைரியமாக செயல்படுவோம்.

அன்பானவர்களே! மரித்தும் பேசும் ஆபேலுடைய பிரசங்கத்தைக் கொஞ்சம் கேட்டோம். இன்னும் நிறைய உண்டு. இருப்பினும், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை ஜாக்கிரதையாய் நம்முடைய வாழ்வில் கடைபிடிப்போமாக, அப்படிச் செய்வோமானால் ஆபேலுக்கு பரலோக பாக்கியத்தை வாக்குத்தத்தம் செய்துள்ள தேவன் நமக்கும் அதைக் கொடுப்பார்.

ஆகவே, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை நம்பிக்கையோடும், தைரியத்தோடும் நடத்தி இம்மைக்குரிய ஆசீர்வாதங்களையும், மறுமைக்குரிய ஆசீர்வாதத்தையும் பெறுவோமாக. ஆமென்! ஆமென்!!


**Rare Opportunity - Dont Miss**
**Master Degree in Bible**



Duration : 6 Weeks in a year

Teachers : From Abroad - USA

Medium : English

Degree : By Accredited University in USA

Fees : Free

Qualification : Must have a basic degree in Bible

Age : Between 25 -50

**Contact : 99655 - 30385 , 98427 - 30382**

# பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு

Bro. J.C. சோட்

**வே**தாகமத்தில் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு பற்றியும் அதைப் பெற்றுக் கொண்டவர்கள் செய்யக் கூடியவை பற்றியும் மிக அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது என்றுதான் தெரிகிறது. பெந்தெகொஸ்தே சபைகள் ஆவியானவரின் அற்புத அடையாளங்களைப் பற்றி உரத்த குரலில் கூறிவருகின்றனர். ஆனால், நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; அவர்களுக்குள்ளேயே பிரிவுகள், வேதாகமத்தில் காணப்படாத சபைகளில் அங்கம் வகிப்பது, சபைகளுக்கு மனிதர்களுடைய பெயர்களைத் தரித்துக் கொள்ளுவது, இன்னும் முரண்பாடாகப் போதிப்பது ஆகிய அனைத்தும் அவர்களிடம் உண்டு. நிச்சயமாக, ஆவியானவர் இவ்வாறாகச் செய்ய அவர்களை வழிநடத்தமாட்டார். எனவேதான், ஆவியானவரின் உண்மையான பணி என்ன என்பதைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

முந்தைய பாடங்களில் நாம் பார்த்தது போல், இயேசுவின் சிலுவை மரணத்திற்கு முன்பாக, தேற்றரவாளனை அப்போஸ்தலர்களுக்கு அனுப்புவதாக அவர் வாக்களித்தார். நினைவிருக்கட்டும், இது எல்லோருக்கும் பொதுவாக அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் அல்ல என்பது. ஆனால், இது அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம். பின்னர், கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப்பின், தமது பரலோக பிதாவினிடத்திற்கு அவர் திரும்புவதற்கு முன்னர், பரலோகத்திலிருந்து வல்லமை வருமளவும், தமது அப்போஸ்தலர்களை எருசலேமிலே காத்திருக்கச் சொன்னார் (லூக்கா 24 : 49: அப் 1: 8). அவர்களும் அவ்வாறே செய்தனர். தொடர்ந்து நாம் படிக்கிறோம், **பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளினவரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்** (அப். 2 : 1-4).

இப்போது, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட அந்த மனிதர்கள் யார்? தேற்றவாளனின் வாக்குத்தத்தைக் கர்த்தர் யாருக்குக் கொடுத்திருந்தார்? உன்னதத்திலிருந்த வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை எருசலேமில் காத்திருங்கள் என்று யாருக்குக் கட்டளையிட்டார்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் அப்போஸ்தலர்கள் தான். அதன் பிறகு, அந்நிய மொழிகளில் பேசி, அற்புதங்கள் செய்யக்கூடிய வல்லமையைப் பெற்றுக் கொண்டவர்கள் யார்? மீண்டும், அதே அப்போஸ்தலர்கள் தான் (லூக்கா 24 : 49 ; அப்.2 : 43).

அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவி வாக்களிக்கப்பட்டது. பின்னர் யோவேல் தீர்க்கதரிசி, யோவேல் 2 : 28 – ஆம் வசனத்தில் முன்னுரைத்தபடி, ஆவி அவர்களுக்குப் பொழியப்பட்டது; அப்போஸ்தலர் நடபடிகள் 2 : 16,17–ஆம் வசனங்களில் லூக்கா எழுதியுள்ளது போல எருசலேமில் அன்றைய தினத்தில் அது நிறைவேறியது – இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான் ஸ்நானன் கூறியிருந்தது இது பற்றித்தான் (மத் 3 : 11).

திருமுழுக்கு என்ற வார்த்தைக்கு அடக்கம், முழுக்குதல், ஒன்றை மேற்கொள்ளுதல் எனப் பொருள். திருமுழுக்கு என்பது தண்ணீரோ அல்லது பிற காரியங்களோ சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். எனவே, பெந்தெகொஸ்தே நாளிலே அப்போஸ்தலர்கள் எருசேலேமில் கூடி வந்த நேரத்தில், பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல், வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று (அப். 2 : 2) என வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. வேறு விதமாகக் கூறினால், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியில் முழுக்கப்பட்டனர் அல்லது அடக்கம் செய்யப்பட்டனர். அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டதிற்கு அத்தாட்சியாக அவர்கள் அந்நிய மொழிகளில் பேச ஆரம்பித்தனர் (அப். 2 : 3, 4). இந்த மொழிகள் புரியக் கூடியவைகளாக இருந்தன. ஏனெனில், அவைகளைக் கேட்டவர்கள், அவரவர் மொழிகளில் கேட்பதாக எல்லாரும் ஆச்சரியப்பட்டுக் கூறினார்கள் (அப். 2 : 6).

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியில் திருமுழுக்குப் பெற்றதின் விளைவாக பலர் ஆசீர்வதிக்கப்பட்டனர். எப்படியெனில், புதிய ஏற்பாடு இன்னும் எழுதப்பட்டுத் தரப்படாத நிலையில் இருந்தது. எனவே, சத்தியத்தைப் போதிக்க, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டு இறுதியாக எழுதப்பட்ட வார்த்தை கொடுக்கப்பட்டது.

வேதாகமத்தில் காணப்படும் மற்றும் ஒரே ஒரு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு கொர்நேலியும் அவன் வீட்டாரும் சம்பந்தப்பட்டது. இந்தக் குடும்பம் புறஜாதியாரைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. அப்போஸ்தலர்கள் அனைவரும் யூதர்கள். அவர்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியின்

திருமுழுக்கைப் பெற்றிருந்தனர். கர்த்தர் பாரபட்சமற்றவர் என்பதை நிரூபித்துக்காட்ட புறஜாதியாரும் பரிசுத்த ஆவியாவரின் திருமுழுக்கைப் பெற்றனர்.

அப்போஸ்தலர்கள் நடபடிகள் 10,11 - ஆம் அதிகாரங்களில் இந்தக் குடும்பத்தைப் பற்றி படிக்கிறோம். வசனம் கூறுவதைப் பாருங்கள்: **இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனிதன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவ பக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்த, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு, அவனை உற்றுப்பார்த்து, பயந்து : ஆண்டவரே, என்ன என்றான். அப்பொழுது அவன் : உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனிதரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி. அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் தங்கியிருக்கிறான். அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது. நீ செய்ய வேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான்** ( அப். 10 : 1 -6 ). தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல என்பதை பேதுருவுக்கு உணர்த்தும் படியாகவும் புறஜாதியார் இரட்சிப்புக்குள் வரும்படியாகவும் இது நடந்தேறியது. இதன் பிறகு, பேதுருவும், மற்றவர்களும் கொர்நேலியுவின் வீட்டுக்கு வந்தார்கள். பின்னர், வசனம் கூறுகிறது: **அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்** (அப். 10 : 34-35) பேதுரு தொடந்து போதிக்கிறான். பின்னர், வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்டபோது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு : **நம்மைப் போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞாஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்** (அப். 10 : 44 - 48).

அப்போஸ்தலர் நடபடிகள் 11-ஆம் அதிகாரத்தில், கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் கர்த்தருக்குக் கீழ்ப்பட்டிருந்தபோது, செசரியாவில் என்ன நடந்தது என்பதை எருசலேமில் பேதுரு சொல்லுகிறான். அதாவது, " நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன். ஆதலால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அனுக்கிரகம் பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அனுக்கிரகம் பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான். இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து; அப்படியனால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள் (அப். 11 : 15 - 18).

பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் ஆரம்பத்தில், அதாவது எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளில், எவ்வாறு பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பொற்றார்களோ அவ்வாறே கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் இப்பொழுது பெற்றார்கள் என்பதைப் பேதுரு இங்கு தெளிவாகக் காட்டுகிறார். இது தனிப்பட்டது (பிரத்யேகமானது), எல்லாரும் பெற்றுக் கொண்டது அல்ல என்பதைக் கவனியுங்கள், பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்ற அந்தக் காலத்திற்கு அதாவது, சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்திற்கு பேதுரு செல்ல வேண்டியதாயிற்று; ஏனெனில் இடைக்காலத்தில் வேறு எவரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறவில்லை.

மற்ற எல்லா கிறிஸ்தவர்களின் நிலை என்ன? அவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனரா? இல்லை. அவர்கள் பெறவில்லை. எல்லா கிறிஸ்தவர்களும் அப்போது அதைப் பெற்றிருந்தால், அப்போஸ்தலர்களும், கொர்நேலியுவும் அவர் வீட்டாரும் பெற்றதைப் பற்றி மட்டும் குறிப்பிட்டுப் பேசும் ஒரு பெரிய காரியமாக அது இருந்திருக்குமா?

ஆனால், நிச்சயமாக இன்று பல கிறிஸ்தவர்கள், பரிசுத்த அவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பார்கள் என சிலர் சொல்லக்கூடும். இல்லை, ஒருவர் கூட கிடையாது. ஒருவரும் இன்று பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறவில்லை. எதற்காக அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும்? நம்மை வழிநடத்த, எழுதப்பட்ட வசனங்கள் உள்ளது. அதிலுள்ள உபதேசத்தின்படி கீழ்ப்படிந்து நடந்தால், கர்த்தர் வாக்களித்தபடி நம்மை இரட்சித்து ஆசீர்வதிக்கிறார். அப்படியானால், பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை நாங்கள் பெற்றிருக்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் மிகவும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். ●

பெண்கள் பகுதி

# இரு மனம் என்ற பாவம்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**தே**வன் எப்போதுமே முழுமனதுடன் செய்யக்கூடிய சேவைகளையே நாம் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகிறார். இருந்த போதிலும் ஆணும், பெண்ணும் எல்லாக் காலத்திலும் தேவனையும் நேசித்து, உலகத்தையும் நேசிக்கக் கூடியவர்களாகவே இருந்து வருகிறார்கள். இவர்கள், தேவன் ஏதோ தங்களோடு இருக்கிறார் என்று வாயளவில் சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். மதம் என்பதை ஜாலியான பொழுதுபோக்கிற்காகவும், தங்களது கஷ்டத்திற்கு உதவுவதற்கேதுவான ஒன்றாகவும் வைத்துக் கொள்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் சாலமோன் ராஜாவின் மரணத்திற்குப் பிறகு ராஜ்ஜியம் இரண்டானது. யெரோபெயாம் தேவனால் பதவியைப் பெறுகிறான். தீர்க்கதரிசியாகிய அகியா இவனை ராஜாவாக ஏற்படுத்தினான். இவன் வடக்கு ராஜ்ஜியத்திற்கும், தெற்கு ராஜ்ஜியத்திற்கு சாலமோனின் மகன் ரெகோபெயாமும் இராஜாவாகிறார்கள். எருசலேம் தெற்கு ராஜ்யத்தில் இருந்தது. அந்த நாட்களில் தொடங்கி இஸ்ரவேலின் சரித்திரம் இரண்டு பிரிவுகளாகப் பிரியத் துவங்கியது. வடக்கே இஸ்ரவேல் ராஜ்யம், தெற்கே யூதா ராஜ்ஜியம் என்று பெயராயிற்று. இவைகளை 1 ராஜாக்கள் 11 , 12 , 13 ஆகிய அதிகாரங்களில் காணலாம்.

இச்சூழ்நிலையில் யெரோபெயாம் தன் ராஜ்யத்தின் மக்கள் தேவனுக்கு ஆராதனை செய்யும்படி தெற்கே எருசலேம் தேவலயத்திற்கு வந்து அங்கேயே தங்கிவிட்டால் தன் ராஜ்யத்திற்கு வீழ்ச்சி வந்துவிடும் என்று எண்ணி, தாண் பெத்தேல் என்ற இரு இடங்களிலும் பொன்னினால் இரண்டு கன்றுக் குட்டிகளை உண்டாக்கி ஜனங்களை எருசலேமுக்கு போக விடாமல் செய்து, எகிப்திலிருந்து வழிநடத்தி வந்த தேவர்கள் இவைகளே என்று ஒன்றைப் பெத்தேலிலும் ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான்.தன் மனதிலே தானே நியமித்த நாளில் பண்டிகைகளைக் கொண்டாடினான். பின்பு, ஒருநாள் தன் மகன் வியாதிப்பட்டு மரணப் படுக்கையாய் இருக்கும்போது தன் மனைவியை வேஷம் மாற்றி தீர்க்கதரிசியிடம் அனுப்புகிறான். சர்வ வல்லமையுள்ள தேவன்,

சகலத்தையும் அறிந்த தேவன் தீர்க்கதரிசியைக் கொண்டு கடுமையாக தண்டித்து அனுப்பி விடப்பட்டாள். கஷ்டம் வரும்போது தேவனையும், தேவப்பிள்ளைகளையும் தேடினான். அதுவும், வேஷம் மாறிப் போனால் தீர்க்கதரிசியை ஏமாற்றி விடலாமென்று எண்ணி தன் மனைவியை ஏவி விடுகிறான். அவளும் அதை நம்பிச் சென்றாள். ஏன் இந்த நேரத்தில் தன் மனைவியை பெத்தேலுக்கும் தாணுக்கும் அனுப்பவில்லை? தனக்கு கஷ்டம், நெருக்கம் என்று வரும்போது தேவன் வலிய வந்து தலையிட்டு தன் பிரச்சனையை உடனே நீக்குவார் என்று நினைப்பு. பிரகாசமான நாட்களில் பிசாசிடமும், பிசாசின் பிள்ளைகளிடமும் செல்லும்போது, அடைமழை நாட்களிலும் உதவிக்கு அவனிடமே செல்ல வேண்டியதுதானே! அருமையானவர்களே! நமக்குத் தெரியும் சாத்தான் நமக்கு எந்த உதவியையும் செய்யமுடியாது என்று. இதை யெரோபெயாமும் நன்றாக அறிந்திருந்தான். தாணிலும் பெத்தேலிலும் இருக்கும் விக்கிரகங்கள் தன் மகனைக் காப்பாற்ற முடியாது என்று. புயலின்போது தேவன் நம்மோடு நிற்க வேண்டுமென்று எதிர்பார்க்கும் நாம் புயலுக்கு முன்னும் அதே தேவனோடு ஏன் நிற்கக்கூடாது?

தேவனுக்குத் தெரியும் எப்போதும் இரண்டு வகையைச் சேர்ந்த மக்கள் தான் மனுக்குலம் என்று. நோவாவின் நாட்களில் பார்த்தால் நீதிமான்கள் துன்மார்க்கர் என்று வாழ்ந்தார்கள். மத் 7 : 13, 14 -ல் பார்க்கும் போது குறுகலான பாதை, விசாலமான பாதை என்று இரு பாதைகள். கன்மலையின் மேல் அல்லது மணலின்மேல் வீட்டைக் கட்டுகிறவர்கள் ( மத் 7 : 24-27 ). கிறிஸ்துவுக்காக வாழ்கிறோம் அல்லது அவரை எதிர்த்து வாழ்கிறோம் (மத் 12 : 30). நியாயத்தீர்ப்பிலே ஒன்றான, வலதுபுறம் அல்லது இடதுபுறத்தில் நிற்போம் ( மத் 25 : 31 -46 ). இப்படியாக இரண்டு காரியங்கள் நம் கண்முன் நின்று கொண்டேயுள்ளது.

இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவராலும் கூடாது. ஒன்றைப் பகைத்து மற்றொன்றைச் சிநேகிப்பான். தேவனுக்கும் மனிதனுக்கும் ஊழியம் செய்யவே முடியாது. உலகத்தை ஒருவன் நேசித்தால் அவனிடத்தில் தேவ அன்பு இராது. தேவன் மேல் ஒருவனுக்கு அன்பு அதிகரிக்கும்போது ஆத்துமாவை அழித்துப் போடும் காரியங்களான தவறான பொழுபோக்கு, தவறான அறிவு, உலக மக்களோடு ஒட்டி உறவாடுதல், தரக்குறைவான உரையாடல்கள் இப்படி

எதுவாயினும் தேவனிடத்திலிருந்து தூரம்போய் விடுவோமோ என்று நம்மையுமறியாமல் ஒதுக்கிவிடுவோம்.

யெரோபெயாமும் அவன் மனைவியும் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதத்தை எதிர்பார்த்தார்கள். ஆனால், சுலபமான வகையில் கிடைக்க வேண்டுமென்று எண்ணினார்கள். தாங்கள் செய்யும் பாவத்தைச் செய்து கொண்டே இருக்க வேண்டும், ஆனால், தேவன் தானே வந்து ஆசீர்வாதங்களை அள்ளிக் கொடுக்கவேண்டுமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால், தேவன் கொடுக்கவில்லை. மாறாக, மனந்திரும்புதலை எதிர்பார்த்தார். மனந்திரும்புதல் அவசியம். தேவனுக்கேற்கும் துக்கப்படுதல்தான் மனந்திரும்புதல். இதற்கு இருதயம் மாற்றப்படவேண்டும். எல்லா காலகட்டங்களிலும் மிகவும் கடினமானது மனந்திரும்புதல். இதற்கு கீழ்ப்படிதல்அவசியம். ஏனென்றால், மிக உன்னதமான நோக்கத்திற்காக சில காரியங்களை நாம் விட்டு விட வேண்டும் அதுதான் மனந்திரும்புதல். பாவத்தையும் செய்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தையும் சுலபமாக அனுபவிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம், எதிர்பார்க்கிறோம். தேவனுடைய வார்த்தை மாறாதது. அதை யாரும் ஏமாற்ற முடியாது.

இருமனமுள்ளவன் தன் வழிகளிளெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான் என்று யாக்கோபு ஆசிரியர் கூறுகிறார்.

இதை வாசித்த அருமையான சகோதரிகளே, யெரோபெயாமின் மனைவியை போல தவறையும் செய்து கொண்டு வேஷம் மாறி தேவ மனிதனிடம் சென்று ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள நினையாமல் மனந்திரும்பி தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து வாழ தேவன் உதவி செய்வராக! ஆமென். ●

## ஆவிக்குரிய பயிற்சியின் அவசியம்

நம்முடைய அறியாமையினாலும் அலட்சியத்தினாலும் சிறுபிள்ளைகளுக்கு நாம் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைக்கொண்டு ஆவிக்குரிய பயிற்சி கொடுக்கத் தவறுவதினால் அவர்கள் கிறிஸ்துவின் தொடுதலை உணராமல் போய்விடுகிறார்கள். அப்போது உலகம் அவர்களைத் தொட்டுவிடும். சாத்தானின் வேலையாட்கள் அவர்களுக்கு இச்சை, வெறுப்புணர்வு, ஏமாற்று, பொய், அவமரியாதை, சந்தேகம், அவிசுவாசம் போன்றவற்றைக் கற்றுக்கொடுத்து விடுவார்கள்.

# இருபதாம் வேதாகம கருத்தரங்கம்

## கருப்பொருள் : " இயேசுவின் மலைப் பிரசங்கம் "

## 29.09.2017 வெள்ளிக்கிழமை

## கருத்துக்களும், கருத்தாளர்களும்

சகோ. **வில்லியம்ஸ்** (சென்னை)

**இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் கூடாது** [ மத்தேயு 6:24 ]

" No Man can serve two Masters " ( Matt. 6:24 )

சகோ. **தேவப்பிரியம்** (சென்னை)

**...உள்ளதென்றும்... இல்லதென்றும் சொல்லுங்கள்** [ மத்தேயு 5:37 ]

" Let your communication be Yea, yea; Nay, nay " ( Matt. 5:37 )

சகோ. **ஜான் மார்க்** (சென்னை)

**நீயோ ஜெபம்பண்ணும்போது** [ மத்தேயு 6:6 ]

" But thou, when thou prayest " ( Matt. 6:6 )

சகோ. **ஏசையன்** (ஈரோடு)

**பரலோகத்திலே சேர்த்துவையுங்கள்** [ மத்தேயு 6:20 ]

" But Lay Up for yourselves Treasures in Heaven " ( Matt. 6:21 )

சகோ. **ஜெர்ரி பேட்ஸ்** ( Jerry Bates )

**நியாயப்பிரமாணத்தை...நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்** [ மத்தேயு 5:17 ]

" I am not come to destroy, but to fulfil the law " ( Matt. 5:17 )

சகோ. **பாண்டியன்** (பாண்டி)

**நாளையத்தினம்... கவலைப்படும்** [ மத்தேயு 6:34 ]

" For the morrow shall take thought for the things of itself " ( Matt. 6:34 )

## 30.09.2017 சனிக்கிழமை

சகோ. **பிலமோன் ராஜா** (மதுரை)

**மாயக்காரனே!** ( மத்தேயு 7:5 )

" Thou Hypocrite... " ( Matt. 7:5 )

சகோ. **ஜெர்ரி பேட்ஸ்** ( Jerry Bates )

**அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்** ( மத்தேயு 7:20 )

" Wherefore by their fruits you shall know them " ( Matt. 7:20 )

சகோ. **மனுவேல்** (சென்னை)

**என்னைவிட்டு அகன்று போங்கள்** ( மத்தேயு 7:23 )

" Depart from me, ye that work iniquity " ( Matt. 7:23 )

சகோ. **ராஜநாயகம்** (காங்கயம்)

**போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்** ( மத்தேயு 7:29 )

" The people were astonished at his doctrine " ( Matt. 7:28 )

***Children Class : Sister. Paula Bates***

## சிறப்பு நற்செய்தி கூட்டம்

*தேதி 29.09.2017*

பேச்சாளர்கள் :

சகோ. **ஆனந்தராஜ்** (பாண்டி)

சகோ. **சேகர்** (திருப்பூர்)

*நேரம் மாலை 6.30 மணி*

**புதிய வெளியீடுகள்**

**சத்தியத்தின் குரல் பாகம் - 30**

வெளியிடுபவர் : சகோ. **அருணாச்சலம்** (கோபி)

பெற்றுக்கொள்பவர் : சகோ. **சம்மா நெல்கிராஜ்** (திருப்பத்தூர்)

**புதிய கைப்பிரதிகள்**

வெளியிடுபவர் : சகோ. **ஜெயக்குமார்** (ஊத்துக்கோட்டை)

பெற்றுக்கொள்பவர் : சகோ. **பாண்டியன்** (சென்னை)

மொழி பெயர்ப்பாளர்கள் : சகோ. **பென்னி மார்ட்டின்,** டாக்டர். **ஏபில் ரோஜர் நாயகம்**

வாலிபர் பகுதி

# அவன் வானத்திற்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான்

சகோ. பென்னி மார்ட்டின்

**பி**ரியமான வாலிப உள்ளங்களுக்கு உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பிரியமானவர்களே, அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான் என்னும் தலைப்பைப் பார்க்கும் போது யாரோ ஒருவன் சர்க்கஸில் மக்களை பரவசப்படுத்துவதற்காக சாகச விளையாட்டுகளை செய்து கொண்டிருப்பது போல் தோற்றமளிக்கிறதா? உண்மை என்னவென்றால், இங்கே ஒரு வாலிபன் தன்னுடைய பேராசையினால் பெருமையினால் கீழ்ப்படியாமையினால் இப்படி ஒரு கோரமான மரணத்தை சந்தித்தான். அவன் யார்? என்று நீங்கள் உங்கள் உள்ளங்களில் கேட்பது எனக்குப்புரிகிறது. அவன் வேறுயாருமில்லை, தாவீதின் குமாரனாகிய அப்சலோம்தான். நாமெல்லாரும் அறிந்திருக்கிறபடி தாவீது ஒரு மிகச்சிறந்த தேவதாசன். ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த தாவீதை பரலோகத்தின் தேவன் அரசனாக்கி அரியணையில் அமரச் செய்தார். வாழ்க்கையின் சில கட்டங்களில் தாவீது விழுந்து போயிருந்தாலும் பின்பு சுதாரித்துக்கொண்டு எழுந்து நிலைத்து நின்றார். அவர் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற தாசனாக திகழ்ந்திருக்கிறார். இப்படிப்பட்ட தேவதாசனாகிய தாவீதின் குமாரனாகிய அப்சலோம் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கி சாக வேண்டியதற்கு அவனிடமிருந்த மூன்று மோசமான பண்புகள் காரணங்களாக அமைந்தன. அவைகளை நாம் இப்போது ஒவ்வொன்றாக பார்க்கப்போகிறோம்.

## 1. பெருமை

அப்சலோம் என்னும் பெயரின் பொருள் சமாதானத்தின் தகப்பன் என்பதாகும். ஆனால் இந்த அப்சலோம் தன் வாழ்நாள் முழுவதும் சமாதானமில்லாமல் தான் வாழ்ந்திருக்கிறான். இந்த வாலிபன் சாகும்போதுகூட சமாதானமில்லாமல் தான் செத்திருக்கிறான். வாலிபனாகிய இந்த அப்சலோம் அழகாக இருந்திருக்கிறான். இவனுடைய அழகைப் பற்றி வேதவசனம் இப்படியாகச் சொல்கிறது. இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப்போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக்கொள்ளப்பட்டவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி

உச்சந்தலை மட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருக்கிறது (2 சாமுவேல் 14 : 25). இந்த அப்சலோம் பெருமை பிடித்தவனாக இருந்திருக்கிறான். பெருமை இல்லையென்றால் தன் தகப்பனாகிய தாவீதை அரியணையிலிருந்து இறக்கிவிட்டுத்தான் அதில் அமரவேண்டும் என்கிற ஆசை அவனுக்குள் வந்திருக்காது. பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் என்று (1பேதுரு 5 : 5) நாம் வாசிக்கிறோம். இந்த உலகில் ஒருவர் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் அவர் பெருமையுள்ளவராக இருந்தால் தேவன் அப்படிப்பட்ட நபருக்கு எதிர்த்து நிற்கிறார். யாத்திராகமம் ஐந்தாம் அதிகாரத்தில் எகிப்தின் ராஜாவாயிருந்த பார்வோனிடத்தில் போய் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு வனாந்திரத்திலே பண்டிகை கொண்டாடும்படி ஜனங்களை போகவிடும்படியாக கேட்டுக்கொண்டார்கள். அதற்குப்பார்வோன் நான் இஸ்ரவேலைப் போகவிட கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன் என்று பெருமையாகச் சொன்னான். அதன் விளைவாக தேவன் அவனை வாதைகளால் வாதித்தார். நாமும் பெருமையைக் களைந்துவிட்டு தாழ்மையைத் தரித்துக்கொண்டால் தேவன் நமக்கு கிருபையை அளிப்பார்.

## 2. கீழ்ப்படியாமை:

வாலிபனாக இருந்த இந்த அப்சலோம் தன் தகப்பனாகிய தாவிதுக்கு கீழ்ப்படியாமல் கலகம் பண்ணுகிறவனாகக் காணப்பட்டான். தகப்பனை கனம் பண்ண வேண்டும் என்னும் தேவனுடைய கட்டளையை மீறி பதவிப்பசியில் தகப்பனுக்கு விரோதமாக கலகம் பண்ணினான். அப்சலோம் தன் தகப்பனுக்கு கீழ்ப்படிந்திருந்தால் தானாகவே ராஜபதவி அவனைத் தேடி வந்திருக்கும். தேவன் ஏதேன் தோட்டத்திலிருந்தே கீழப்படியாமையை வெறுத்து வருகிறார். இஸ்ரவேலின் ராஜாவாயிருந்த சவுலைப்பார்த்து தேவன் அமலேக்கியரை சங்கரித்து அவர்களை நிர்மூலமாக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். ஆனால், சவுல் ராஜாவாகிய ஆகாகையும் ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப்போட மனதில்லாமல் தப்பவைத்து அற்பமானவைகளும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழத்துப்போட்டான். அதனால் தேவன் சவுலை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத்தள்ளினார் ( 1 சாமுவேல் 15 ). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூட மரணபரியந்தம் தம்மை அனுப்பின பிதாவுக்கு எல்லாவிதத்திலும் கீழ்ப்படிந்தார். எனவேதான், நாம் அவர் குமாரனாயிருந்தாலும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்று எபிரேயர் 5 : 8 ல் வாசிக்கிறோம். இஸ்ரவேல் போனதால்தான் தனக்கு வரவேண்டிய ராஜபதவியையும்

ஜனங்கள் கீழப்படியததினால் தான் வனாந்திரத்தில் அலைக்கழிக்கப்பட்டார்கள். இந்த அப்சலோம் தேவனுக்கு கீழப்படியாமல் சமாதானத்தையும் இறுதியாக இந்தக்கோர மரணத்தின் மூலமாக தன் உயிரையும் இழந்து விட்டான்.

**3. பேராசை :**

கடைசியாக இந்த அப்சலோம் அரியணைமீது அயராது ஆசை வைத்துக்கொண்டிருந்தான். அவனிடமிருந்த அந்த பேராசையே பெருநஷ்டமாக மாறிவிட்டது. அப்சலோம் காலை தோறும் எழுந்து பட்டணத்து வாசலுக்குப்போகிற வழி ஒரத்திலே நின்று கொண்டு எவனாகிலும் தனக்கு இருக்கிற வழக்கு முகாந்தரமாய் ராஜவினிடத்தில் நியாயத்திற்காகப் போகும்போது அவனை அழைத்து, நீ எந்த ஊரான் என்று கேட்பான்; அவன் உமது அடியான் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றுக்கடுத்த இன்ன ஊரான் என்றால், அப்பொழுதே அப்சலோம் அவனை நோக்கி இதோ உன் காரியம் நேர்மையும் நியாயமுமாயிருக்கிறது: ஆனாலும் ராஜாவினடத்தில் உன் காரியத்தை விசாரிப்பார் ஒருவருமில்லை என்பான். பின்னும் அப்சலோம் வழக்கு வியாஜமுள்ளவர்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து நான் அவர்களுக்கு நியாயஞ்செயஙயம்படிக்கு என்னை தேசத்திலே நியாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும் என்பான். இந்தப் பிரகாரமாக அப்சலோம் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காக வரும் இஸ்ரவேலருக்கெல்லாம் செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்து கொண்டார் (2 சாமுவேல் 15 : 2-6).

அதுமாத்திரமல்ல அப்சலோம் அரசானாக வேண்டும் என்கிற ஆசையில் தன் தகப்பனாகிய தாவீதுக்கு விரோதமாக போர்த்தொடுத்தான். ஆனால் தாவீது தேவனுடைய மனுஷனாக இருந்தபடியினால் இந்தப்போரிலே அப்சலோம் தோல்வியைத்தழுவினான். போரில் அப்சலோம் கோவேறு கழுதையின் மேல் ஏறிவரும்போது அந்தக்கோவேறு கழுதை ஒரு பெரிய கரிவாலி மரத்தில் மாட்டிக்கொண்டு அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான். அப்போது அவன் யோவாப்பால் குத்தி கொல்லப்பட்டான். அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டு அவன்மேல் மகாப்பெரிய கற்குவியலைக்குவித்தார்கள். வாலிபர்களே! வாலிபனாகிய அப்சலோமின் பெருமையும் கீழ்ப்படியாமையும் பேராசையும் அவனுடைய மோசமான பரிதாபகரமான சாவுக்குக் காரணங்களாக அமைந்துவிட்டன. இது நமக்கு அவசியமான பாடமாக காணப்படுகிறது. எனவே மேற்கூறப்பட்ட அப்சலோமின் மோசமான குணாதிசயங்களை நாம் களைந்துபோட்டு தாழ்மையையும் கீழ்ப்படிதலையும் போதுமென்கிற மனநிலையையும் பெற்றுக்கொண்டால் ஏற்ற காலத்தில் தேவன் நம்மை உயர்த்துவார். ●

சிறுவர் பகுதி

# முதல் தீர்க்கதரிசனம்

Bro. ஏபில் நாயகம்

அன்பார்ந்த எனதருமை சிறுவர்களே! இம்மாதமும் உங்களை இவ்விதழின் மூலம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். சிறுவர்களாகிய நாம் வேதாகம சம்பவங்கள் மற்றும் கதைகளை மாத்திரம் கேட்கிறவர்களாக இல்லாமல், வேதாகம உண்மைகளை அறிந்து கொள்வதிலும் நாட்டமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான், தேவ காரியத்தில் நாம் சரியான அஸ்திபாரமுடையவர்களாயிருக்க முடியும். ஆகவே, இப்பொழுது நாம், வேதாகமத்தின் முதல் தீர்க்கதரிசனம் குறித்துக் கொஞ்சம் அறிந்து கொள்வோம்.

ஆதித் தகப்பனாகிய ஆதாமும், ஏவாளும் தேவனால் விலக்கப் பட்ட கனியைப் புசித்து, பாவத்தை இந்த உலகிற்குள் கொண்டு வந்ததற்குப் பிறகு, அதற்கான தண்டனையாக, ஏதேன் தோட்டத்தை விட்டு நம்முடைய தேவனால் வெளியேற்றப்பட்டனர். ஆனால், பிரச்சினை அத்தோடு தீர்ந்து போகாமல், அவர்களுடைய பாவம் சம்பந்தமாக ஏதோ ஒன்று செய்ய வேண்டியிருந்தது. அவர்கள் பாவிகளான போதும், அன்பான நமது தேவன் அவர்களைத் தொடர்ந்து நேசித்தார். பாவம் பிரச்சினையின் முடிவாக இருக்க அவர் அனுமதிக்கவில்லை. தீமையைப் பார்க்கக் கூடாத சுத்தக் கண்ணனாகவும், பரிசுத்தராகவும் அவர் இருக்கிறபடியால், பாவம் மன்னிக்கப்படாமல் இருப்பதை தேவன் விரும்பவில்லை (ஆபகூக் 1:13). பாவத்திலிருந்து ஆதாமும், ஏவாளும் இன்னும் சகல ஜனங்களும் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும்படியாக தேவன் ஏற்கனவே ஓர் அருமையான திட்டத்தைத் தீட்டினார்.

இந்த மகாப் பெரிய இரட்சிப்பின் திட்டம் பற்றிய குறிப்பு, ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்குக் கொஞ்சம் முன்னதாகக் கொடுக்கப்பட்டது. தேவன் சாத்தானைக் கடிந்து கொண்டு, " **உனக்கும், ஸ்திரீக்கும், உன்வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்** என்றார் (ஆதி. 3:15). இப்படிச் சொன்னதன் மூலமாக, தேவன் அங்கே எதைச் சொல்லியிருக்கிறார் என நினைக்கிறீர்கள்?

அதாவது, சாத்தானுக்கும், அவனைப் பின்பற்றுகிறவர்களுக்கும், தேவனைப் பின்பற்றுகிறவர்களுக்குமிடையே எப்பொழுதும் பிரச்சினை இருக்குமென்று சொல்லியிருக்கிறார் ( மத். 23:33; யோவான் 8:44; யோவான். 3:10; சங். 22:30 ). ஏதேனிலிருந்து இன்றுவரை, ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாதபடி சாத்தான் முயற்சித்துக் கொண்டேயிருக்கிறான். நீதிமான்களும், அநீதிமான்களும் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் ஒவ்வாதவர்களாளவே இருந்து வருகின்றனர். தேவன், இந்த பிரச்சினையை எப்படிக் கையாளப் போகிறேன் என்று அங்கே சொல்லியுள்ளார். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்று.

ஜனங்கள் பாவம் செய்யும்படியான சகல வழிகளையும், சாத்தான் செய்து, பாவத்திலிருந்து அவர்கள் இரட்சிக்கப்படாதபடி தேவனைத் தடுத்தாலும், ஜனங்கள் பாவ மன்னிப்புப் பெறும்படியான வழியை தேவன் உண்டாக்குகிறார்.

இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, அவர் மிகவும் பாடுபட்டார் சாத்தானாலே அவர் குதிங்கால் நசுக்கப்பட்டது. ஆனால், அவருடைய மரணம், தேவன் பாவத்தை மன்னிக்கும்படியாகச் செய்தது. அதாவது சாத்தான் தலை நசுக்கப்பட்டது. இப்பொழுது சாத்தானுடைய வல்லமையிலிருந்து ஜனங்கள் தப்பமுடியும் ( அப். 26:18 ரோம. 16:20). ஜனங்கள் மன்னிப்புப் பெறுவதைத் தடுத்து நிறுத்தும் சாத்தானின் முயற்சியானது, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் அழிக்கப்பட்டது ( எபி. 2:14, யோவா. 3:8 ). நம்முடைய தேவன் மனிதனுக்காக எவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கிறார் பாருங்கள்.

ஆகையால், தேவனுக்கு நம்முடைய இந்தச் சிறிய பிராயத்திலிருந்தே நீங்கள் ஒவ்வொருவரும் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்படி இருப்பீர்களா ?

## தெரிந்துகொள்ளுதல்

- ★ மோசே “அநித்தியமான பாவசந்தோசங்களை அனுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே” தெரிந்துகொண்டார்.
- ★ யோசுவா “ நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்” என்று கர்த்தரை சேவிப்பதை தெரிந்துகொண்டார்.
- ★ சங்கீதக்காரனாகிய தாவீதும் மோசே மற்றும் யோசுவாவைப்போல சரியான ஒன்றைத் தெரிந்துகொண்டார். சங்கீதம் 119 : 30 ல் அவர் “ மெய்வழியை நான் தெரிந்துகொண்டு உம்முடைய நியாயங்களை எனக்கு முன்பாக நிறுத்தினேன் ” என்று சொன்னார்.

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழுமுகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை அக்டோபர் மாத இதழில்)**

1. தேவன் தமது விரலினால் எழுதினது என்ன?
2. ஜனங்களைப் பார்த்து தேவன் சொன்னது என்ன?
3. ஆசாரிப்புக்கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தவர் யார்?
4. வருஷத்தில் எத்தனைதரம் ஆண் மக்கள் தேவசந்நிதியில் வரவேண்டும்?
5. வெள்ளாட்டு மயிரைத் திரித்தவர்கள் யார்?
6. வாசஸ்தலத்தை உண்டாக்கினவர்கள் யார்?
7. இரண்டரை முழநீளமும் ஒன்றரை முழ அகலமுமானது என்ன?
8. இருபது வயது முதல் எண்ணப்பட்டவர்களின் தொகை எவ்வளவு?
9. இஸ்ரவேல் புத்திரரின் பணத்திற்கான அடையாளம் என்ன?
10. யாருடைய பேரை தேவன் கிறுக்கிப்போடுவார்?

(யாத்திராகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்)

## செப்டம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. விதவை, திக்கற்றபிள்ளை ( 22 : 22 )
2. 74 பேர் ( 24 : 9,10 )
3. மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் ( 25 : 2 )
4. சீத்தீம் மரம் ( 25 : 10 )
5. சாட்சிப்பிரமாணம் ( 25 : 21 )
6. ஆரோன் ( 28 : 3 )
7. நீ செய்யவேண்டிய முறையின்படி ( 30 : 37 )
8. ஒரு சேக்கல் ( 30 : 13 )
9. கொலைசெய்யப்படப்படவன் ( 21 : 15 , 17 )
10. கர்த்தருடைய மகிமை ( 16 : 10 )

## சரியான பதில் எழுதியவர்கள்

வளர்மதி ராஜ்குமார் – காங்கேயம்
S. ஜெயராஜ் – பொள்ளாச்சி
M. செல்வம் – வெள்ளலூர்
V.S.S. பால்ராஜ் – மதுரை
மாலதி – மூலனூர்
ஜெமீலா செல்லையா – நெல்லை
அருள்ராஜ் – சென்னை
M. செல்வி நித்யா – காங்கேயம்
ஜெபதாய் – நாசரேத்
இந்திரா ஜெபக்கனி – நாசரேத்
டேனியல் லிவிங்ஸ்டன் – திருச்சி
பழனிவேல் – பொம்மியம்பட்டி
செல்வமணி குணசேகரன் – காங்கயம்
பாக்கியம் சம்பூர்ணம் – ஈரோடு
ஜான்சி – ஆனைமலை
நிறைமதி – சென்னை
புஷ்பம் முத்துமாணிக்கம் – ஈரோடு
ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
ஆர்த்தி – சின்ன மணலி
ஜெயசிங் – சென்னை
சாமுவேல் மோகன்தாஸ் – சென்னை
சிப்போராள் மோசஸ் – திருச்சி

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** நாம் ஏன் தேவனை விசுவாசிக்க வேண்டும்?

**பதில் :** நடைமுறையில் அநேக ஜனங்கள் தேவனை விசுவாசிக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை தேவன் இருக்கிறார் என்பது, அவர்கள் இருப்பதைப் போலவே வெளிப்படையான ஒன்றாக இருக்கிறது. மேலும் கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப் பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார் (ஏசாயா 33 : 22). தேவன் ஆவியாயிருக்கிறார் ( யோவான் 4 : 24 ). தேவன் ஒளியாயிருக்கிறார் (1யோவான் 1 : 5 ). தேவன் அன்பாகவே இருக்கிறார் (யோவான் 4 : 16 ). மேலும், நாம் வாழ்கின்ற இப்பிரபஞ்சம், சிருஷ்டிப்பு போன்றவைகள் தேவன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் எப்போதுமே இருந்து வருவது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இல்லையென்றால் ஒன்றுமே இல்லாத நேரத்தில் ஏதோ ஒன்று ( உலகம், மனிதன் , மற்றும் இன்று உலகில் இருப்பவைகள் எல்லாம்) ஒன்றுமில்லாமையில் இருந்து தான் வந்திருக்க வேண்டும் என்றாகிவிடும்.

தேவனை விசுவாசிப்பதற்கான மிகச்சிறந்த காரணம், உலகத்தில் காணப்படும் ஒழுங்கு மற்றும் அமைப்பு என்ற உண்மைதான். பூமி, சூரியன், சந்திரன் மற்றும் பிரபஞ்சத்திலுள்ள எண்ணற்ற செயல்கள் ஆச்சரியமானவை. இவைகளின் துல்லியத்தைப் பொறுத்தவரை எந்தக் கடிகாரத்தையும் இதனுடன் ஒப்பிட முடியாது. ஓர் அருமையான கடிகாரத்தின் சிக்கலான பாகங்கள் தானாகவே உருவாகி, தானாகவே ஒழுங்குபடுத்தப்பட்டு, அதை உண்டாக்கினவர் இல்லாமல் அது வேலை செய்வதை கற்பனை செய்து பார்க்க முடியுமா?

தேவனை விசுவாசிப்பதற்கான மற்றுமொரு காரணம், மனிதனில் இருக்கும் ஒழுக்க ரீதியிலான உணர்வுதான். எதுசரி, எது தவறு என பகுத்தறியும் திறமை கீழான மிருகங்களிடம் இல்லை. இது கலாச்சாரத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், அறிவுள்ளவர்கள், அறிவில்லாதவர்களிடையே வேறுபட்டாலும் இது உலகெங்கும் காணப்படக்கூடிய ஓர் உண்மை தான்.

இந்த உலகம் இருப்பதற்கு, இதை உண்டாக்குவதற்கு வல்லமை பெற்ற ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் அவசியப்படுகிறார். இவ்வையகத்தை உருவாக்கத்தக்க விவேகமுள்ள ஒருவர் அவசியப்படுகிறார். அது போலவே ஒழுங்கு, அமைப்பு, உணர்வு, மனசாட்சி போன்றவைகளை ஒருமுகப்படுத்தி அதை மனிதனுடைய சுபாவத்தின் மீதும், இயற்கையின் மீதும் செயல்படுத்துவதற்கு திறன் பெற்ற ஒருவர் அவசியப்படுகிறார். அவர் தான் தேவன் என்று வேதாகமம் போதிக்கிறது. ●

# நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம்........

Bro. பாண்டியன்

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! நம்முடைய வாழ்நாட்கள் கொஞ்சமானது என்று யோபு வலியுறுத்துகிறார். **ஸ்தீரியினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாய் இருக்கிறான். அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்கிறான்; நிழலைப்போல நிலை நிற்காமல் ஓடிப்போகிறான்** (யோபு 14 : 1,2 ). ஒரு ரோஜா எவ்வளவுதான் அழகாய் இருந்தாலும் ஒரே நாளில் வாடி பொலிவிழந்து விடுவதைப்போல், மனிதனின் வாழ்நாட்கள் சீக்கிரம் கடந்து போகிறது. இன்றைய சமுதாயத்திலே மிதமிஞ்சிய விளம்பரங்கள் மனிதனின் இயல்பான உணவு, பழக்க வழக்கங்களை திசை மாற்றியுள்ளது. அதினால், சிறுவயதிலேயே சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு, அல்சர் என்று பலவித பெலவீனங்களில் சிக்கித் தவிக்கின்றான். டூவிலர் பெருக்கம், நடைகளைக் குறைத்து மேலும் அவனுடைய ஆரோக்கியத்தைக் கெடுக்கிறது. எப்படியிருந்தாலும் பொதுவாக **பூமியில் போராட மனுஷனுக்குக் குறிக்கப்பட்ட காலம் உண்டு** என்றும் யோபின் புத்தகத்தில் வாசிக்கிறோம். மேலும் மனுஷரின் வாழ்நாள் கூலிக்காரன் நாட்களைப் போல, காற்று மேகத்தைப்போல சீக்கிரம் கடந்து போகிற ஒன்றாகவே இருக்கிறது.

நாம் உயிரோடே இருக்கும் நாளெல்லாம் பின்பற்றவேண்டிய சில காரியங்களை வேதத்திலிருந்து காணலாம். சிருஷ்டிப்பின் போது மனிதனுக்கான எல்லாத் தேவைகளையும் சந்திக்கும்படியான வசதியான ஏதேன் தோட்டத்திலிருந்த ஆதாம் தேவ கட்டளையை மீறின போது **நீ உயிரோடே இருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே பூமியின் பலனைப் புசிப்பாய்** என்ற தண்டனை பெற்றான். இப்படியாக மனிதனின் வாழ்நாள் ஆகாரத்திற்காக உழைப்பதிலேயே பெரும்பகுதி செலவழிகிறது. பிரசங்கி அதைப்பற்றிக் குறிப்பிடும் போது, **இதோ உயிரோடிருக்கும்படி தேவன் அருளிச் செய்த நாளெல்லாம் மனுஷன் புசித்துக் குடித்து, சூரியனுக்குக் கீழே தான் படும் பிரயாசம் அனைத்தையும் அனுபவிப்பதே உத்தமுமான காரியம், இதுவே அவன் பங்கு** என்கிறான். உலகமும் அப்படித்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், கிறிஸ்துவின் உபதேசம் உணவு, உடைக்காகக் கவலைப்படுவதை விட தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதே அதிமுக்கியம் என்று வலியுறுத்துகிறது. அந்த ஜீவனுக்கு இந்த உலகமுழுவதும் ஆதாயப் படுத்தினாலும் ஈடாகாது என்று கிறிஸ்து வெளிப்படுத்தி உள்ளார்.

மனுஷன் பிழைப்பது உணவினால் மட்டுமல்ல தேவனுடைய வார்த்தையினாலும் பிழைக்க முடியும் என்று உபதேசித்து மனுஷன் வாழ்க்கையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்.

நடுகிறவனானாலும், நீர்ப்பாய்ச்சுகிறவனானாலும் ஒன்றுமில்லை விளையச் செய்கிற தேனனாலே எல்லாம் ஆகும். அவரே நம் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதித்து, வியாதியை உன்னிலிருந்து விலக்கி நம்மை உயிரோடே வைத்து போஷிக்கிறவர். ஆக அந்த தேவனுக்கே நாம் பயந்து கீழ்ப்படியும் போது நம்முடைய ஆயுசு நாட்கள் பெருகும் ( நீதி 10 : 27 ) இவ்வுலகம் பிசாசினால் தவறான பாதைக்கு மனிதரை வழி நடத்திச் செல்கிறது. நாம் வசதியாய் வாழ்வதற்கு எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற போக்கையும் உருவாக்கியுள்ளது. மதுபானம், விபச்சாரம், சூதாட்டம், போன்றவை தப்பில்லை என்பது போல இவ்வுலகம் போதிக்கின்றது. அநேகர், அதில் சிக்கித் தங்கள் வாழ்க்கையை வீணடித்துக் கொள்கின்றனர். ஒருவன் தேவனுக்குப் பயந்து நடக்கும் போது இப்படிப்பட்டவைகளில் விழுந்து போகாமல் தப்பிக்கிறான். அதனால் தான் தேவன் இஸ்ரவேலரை அவரிடத்தில் கூடிவரச்செய்து, அவருடைய வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணினார். அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக் கொண்டு உன் பிள்ளைகளுக்கும் அறிவிக்கக்கடவாய் ( உபா 4 : 9). உன் இருதயத்தில் வார்த்தையை வைத்து உன் ஆத்துமாவை காத்துக்கொள் என்றும் எச்சரித்தார். எனக்கருமையான சகோதரனே சகோதிரியே இவ்வுலகில் நம் ஆத்துமாவை பாதுகாக்க தேவனுடைய வார்த்தைகளே அன்றி வேறு எதுவும் இல்லை என்பதை உணருவோம். தேவதிட்டப்படி சபை கூடுதலில் தவறாமல் நேரப்படி பங்கு பெற்று தேவனுடைய வார்த்தைகளை இருதயத்தில் வாங்கி தேவனுக்கு பயந்திருக்க வேண்டும். மாத்திரமல்ல நம் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் தேவ வார்த்தையின் அருமையை எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டுள்ளோம்.

வேத புத்தகத்தின் நெருக்கத்தை உணர்ந்தவர்களே தேவனோடே நெருங்கியிருக்க முடியும். தற்காலிகமான இவ்வுலகில் நம் வாழ்க்கை நன்றாயிருக்க மோசே சொல்வதைக் கவனியுங்கள். நீயும் உன் பிள்ளைகளும் நன்றாயிருக்கும்படிக்கும்.... நீ நீடித்த நாளாய் இருக்கும் படிக்கும் நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய கட்டளைகளையும், அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளக்கடவாய் என்றான் ( உபா 4 : 30 ). இதையே தான் நமதாண்டவர் இயேசு, நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின் படி செய்கிறவன் எவனோ அவனை புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன் என்றார். பழைய

ஏற்பாட்டில் வருஷத்திற்கு ஒருமுறை அனுசரிக்க வேண்டிய பஸ்காவை இஸ்ரவேலர் உயிரோடிருக்கும் நாளளவும் நினைவுகூரும்படி கட்டளையிட்ட தேவன் புதிய ஏற்பாட்டில் வாரத்தின் முதல் நாள்தோறும் தம் குமாரனின் மரணத்தை நினைவு கூரும்படி செய்துள்ளார். நம் வாழ்நாளில் தவறாமல் இதைக் கடைபிடிக்கும்போது புத்திமானாய் இருந்து நம் ஆத்துமாவைக் காத்துக்கொள்ள முடியும். நாம் உயிரோடிருக்கும் நாளளவும் வேதத்தை வாசிக்க வேண்டும். அதுவும் நாம் கூடிவந்து (சபையாராக) வேதவாசிப்பை அனுசரிக்க வேண்டும் என்பது தேவ சித்தமாயிருக்கிறது ( உபா 31 : 13 ). அதுவே தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் நாம் கொடுக்கும் மரியாதை. அதன் மூலம் நாம் தேவ பயத்தைக் கற்றுக்கொள்கிறோம். அதனால் வாரத்தின் முதல் நாள் ஆராதனை நம் வாழ்க்கையின் ஒரு அங்கமாக இருக்கிறது. தவறும் போது நமக்கு ஜீவனில்லை என்று ஆண்டவர் எச்சரிக்கின்றார்

இன்றைக்கும் சபைமக்களை தேவபயத்தில் வளர்க்க வேண்டுமானால் வேதவசனங்களின் மூலமாகத்தான் அது முடியும். மனுஷ ஞானத்தினால் மிரட்டி, உருட்டி எல்லாம் தேவபயத்தை ஊட்ட முடியாது. சரி, ஒருவர் தேவனுக்குப் பயந்து நடக்கும் போது அவருக்குக் கிடைக்கக் கூடிய மிகப்பெரிய ஆசீர்வாதம் என்னவெனில், நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை. தேவன் உன்பட்சமாய் இருக்கிறார் என்பதே அது ( யோசுவா 1 : 5 ). இன்னுமாய் நாம் ஏன் அவருக்கு பயந்து நடக்க வேண்டுமெனில், நம் இருதயங்களையெல்லாம் தேவன் அறிந்தவராய் அவனவனுடைய வழிகளுக்குத்தக்கதாய் பலனை அளிக்கிறவராய் இருப்பதால் நாம் உயிரோடிருக்குமட்டும் அவருக்குப் பயந்து நடக்க வேண்டும் (2 ராஜா 8 : 40 ). மோசேயின் சங்கீதத்தில் பெலத்தின் மிகுதியால் என்பது வருஷம் உயிரோடிருந்தாலும் அது வருத்தமும் சஞ்சலமுமாய் இருக்கும் என்று காண்கிறோம். ஆனால், தேவனுக்குக் கீழ்படியும் மனுஷருக்கு உன் நாட்களுக்குத் தக்கதாய் உன்பெலனும் இருக்கும் (உபா 33 : 25). அது தான் உண்மையான ஆசீர்வாதம்; சத்துமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப்பண்ண வல்லவர் நம் தேவன். மருந்து மாத்திரைகளை மருத்துவர் கொடுக்கலாம். ஆனால், சுகத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கவல்லவர் நம் தேவனே ( ஏசா 40 :29 ). தேவனே பாதிவயதில் என்னை எடுத்துக் கொள்ளாதேயும் என்று சங்கீதக்காரன் ஜெபித்துப் பாடுகிறான். காரணம் மன்னுயிரைக் காப்பவர் நம் தேவனே (யோபு 7 : 20). மனுஷருடைய நாட்கள் தேவனுடைய கரங்களில் அல்லவோ இருக்கிறது? தேவக்கட்டளையை மீறின சவுல் ராஜ்ஜியபாரத்தை இழந்தான்.

பின்பற்றி தாவீது அநேக தடைகளை மீறி பெற்றுக்கொண்டான். தேவன் மீது நம்பிக்கை வைப்பதில் சிறந்த ராஜாவாகிய எசேக்கியா தன் ஆயுசுக்காக அழுது புலம்பிய போது அவன் வாழ்நாட்கள் நீட்டிக்கப்பட்டது.

இப்போதும், நாம் தேவனுக்குக் கீழ்படியும் போது நம் வாழ்நாளெல்லாம் நன்மையும் கிருபையும் நம்மைத் தொடரும். நாம் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களைய் நிலைத்திருக்கும் சிலாக்கியம் பெறுகிறோம். உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான். ஒருவனுக்கு இதைவிட வேறு எது பாக்கியமாய் இருக்க முடியும். தேவனே அவனை நீடித்த நாட்களாய் திருப்தியாக்குகிறார். வாலிப வயதும் சீக்கிரம் கடந்து போகும் மாயை தான். ஒருவன் தன் வாலிபப் பிராயத்தில் தேவனை அண்டிக் கொள்ளும் போது ஆசீர்வதிக்கப்பட்டவனாகிறான். ஒருநாள் தேவன் இயேசுவை நியாயாதிபதியாக அனுப்பப்போகிறார். அன்று தேவனோடே சேரும் சிலாக்கியம் அடைய இன்று நாம் வேதத்தை விசுவாசித்து தேவனுக்குப் பயந்து நடக்கத் தீர்மானிப்போம். கிறிஸ்துவின் வருகையில் வெட்கப்படாதபடி தேவன் நம்மைக் காக்க வல்லவராய் இருக்கிறார். தேவ ஆசீர்வாதம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்! ●

## நாளும் நடப்பும்

- **3 ஆம் நூற்றாண்டிலேயே பூஜ்யத்தைப் பயன்படுத்திய இந்தியர்கள் – ஆய்வில் தகவல்**
- **அரசுப் பள்ளி ஆசிரியர்கள் டியூசன் எடுக்கக் கூடாது.**
  **– கல்வித்துறை**
- **ஆமாதபாத் – மும்பை இடையிலுள்ள இந்தியாவின் முதல் புல்லட் ரயில் திட்டம் தொடக்கம்.**
- **வேளாண் ஆராய்ச்சிக்கு உலக வங்கி ரூ. 1100 கோடி ஒதுக்கீடு.**
- **ஆதார் எண் மொபைல் எண்ணுடன் இணைப்பு அவசியம்.**
  **– மத்தியஅரசு**

# தேவனுடைய வசனத்துக்கு நடுங்குதல்

*Bro. Clarence Deloach, Jr.*

நாம் வாழுகின்ற தற்கால உலகில், நாம் பயப்படும் போது தான் பொதுவாக நடுங்குவதைப் பற்றி நினைப்போம்; ஆனால், நிச்சயமாக அந்த அளவுக்குப் பயப்படுவது நல்லதல்ல. ஒருவர் தேவனுக்கோ அவருடைய வார்த்தைகளுக்கோ நாம் நடுங்க வேண்டும் என்று பொதுவாக நினைக்கமாட்டார். சிலர், தேவன் நம் எல்லோரையும் நேசிக்கிறார் நாம் எல்லோரும் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். ஒரு பிள்ளை தன்னுடைய தகப்பனுக்கு முன்பாக நடுங்க வேண்டுமா? இல்லை! என்று சொல்வார்கள்.

பயப்படுகிற அர்த்தத்தில் நடுங்குதலைப் பற்றி நாம் நினைத்தால், மேற்கூறப்பட உணர்வோடு நான் ஒத்துப்போகிறேன். ஆனால், மற்றுமொரு கோணத்தில் பார்த்தால் நடுங்குவது நல்லதென்று பார்க்க முடியும். ஏசாயா 6 ஆம் அதிகாரம் இரண்டாம் வசனத்தில் ஏசாயாவின் வார்த்தைகளைக் கவனியுங்கள் சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்பேன். இங்கே தேவனோடு விசேஷித்த உறவை வைத்துக்கொள்ளுகிற மனிதனுடைய சில குணாதிசயங்களை நாம் காண முடியும். தேவன் இப்பிரபஞ்சத்திற்கே தேவனாயிருக்கிறார். ஆனால், நாம் சில குறிப்பிட்ட குணாதிசயங்களைப் பெற்றிருந்தால், அவர் மனிதனுடைய நிலைக்கு தன்னைத் தாழ்த்தி இறங்கிவர விருப்பமுள்ளவராயிருக்கிறார். தேவன் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிருப்பதில்லை. ஆனால், அவர் வசனத்திற்கு நடுங்கி பயப்படுகிற இருதயங்களில் வாசம் செய்கிறார்.

**நாம் ஆவியில் எளிமையுள்ளவர்களாகவும், நொறுங்குண்டவர்களாகவும் காணப்பட வேண்டும்.**

அதாவது ஆவியில் தாழ்மையுள்ளவர்களை அவர் நோக்கிப் பார்க்கிறார். அதுமாத்திரமல்ல, நாம் ஆவியில் நொறுங்குண்டவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அது பாவத்தினால் மிக ஆழமாக பாதிக்கப்பட்ட ஆவிதான். இது பெருமை மற்றும் சுயநீதிக்கு எதிர்ச் சொல்லாயிருக்கிறது. தேவன் இல்லை என்றால் நாம் ஒன்றும் இல்லை என்று உணர வேண்டும் என்றும், நாம் முழுமையாக அவரைச் சார்ந்திருக்க வேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார்.

**நாம் அவருடைய வசனத்துக்கு நடுங்க வேண்டும் என்று தேவன் சொல்கிறார்.**

நிச்சயமாகவே, தேவன் நாம் வசனங்களைப் படிப்பதற்கு வேதாகத்தை எடுக்கும் போது நடுங்க வேண்டும் என்று சொல்லவில்லை. தேவன் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும் நமக்கு இருக்க வேண்டிய பயம் மற்றும் மரியாதை உணர்வைத் தான் தேவன் குறிப்பிடுகிறார். தேவன் சொல்லியிருக்கிறவைகளிலிருந்து நாம் ஒன்றையும் கூட்டவோ, எடுத்துப் போடவோ கூடாது (வெளி 22 : 18 , 19). அதுமாத்திரமல்ல, தேவனுடைய வார்த்தைகளுக்கு நம் முழுமனதோடு கீழ்ப்படிய நாட வேண்டும். ஆனால், அத்தகைய மரியாதை அநேக மக்களிடத்தில் குறைவுபடுகிறது. வேதாகமம் தேவனுடைய வார்த்தைகள் என்று விசுவாசிப்பதாகச் சொல்லிக் கொள்பவர்களிடத்தில் கூட குறைவுபடுகிறது. அநேகர், வேதாகமத்தை வாசித்து விட்டு அதன்பிறகு தங்கள் விருப்பப்படி வாழ்ந்து தங்கள் செயல்பாடுகளை மறைக்க முயற்சி செய்வார்கள். தங்கள் நடத்தைகளுக்கு ஆதரவாக சாக்குபோக்குகளைச் சொல்வார்கள் அல்லது குறைந்தபட்சம் தங்கள் குற்றங்களின் கடுமையைக்குறைக்க சாக்குபோக்குகளை சொல்வார்கள். அநேகருக்கு பாவம் ஒரு பெரிய பிரச்சனையாக இல்லை என்பது போல் தான் தோன்றுகிறது. மேலும், அவர்களுக்குப் பாவம் என்பது அதிகமாக கவலைப்படக்கூடிய ஒன்றல்ல.

**தேவனுடைய வார்த்தை நம்முடைய அதிகாரமும், நமக்கான சட்டமுமாயிருக்கிறது.**

அதற்கு நாம் இணங்கி எப்படியாவது கீழ்ப்படிய வேண்டும் என தேவன் எதிர்பார்ப்பதாக சிலர் சொல்கிறார்கள். ஆனால், பின்பு அவர்கள் கிறிஸ்து நமக்காக மரித்தார், ஆகையால், நாம் பூரண கீழ்ப்படிதல் இல்லாமலேயே தேவனோடு சரியான உறவு வைத்துக் கொள்ளமுடியும் என தங்கள் பொறுப்புகளைத் தட்டி கழிக்கிறார்கள். அதுமாத்திரம்ல, நாம் பலவீனமான மனிதர்கள் என்பது தேவனுக்குத் தெரியும். எனவே, நம்முடைய தோல்விகளையும், குறைகளையும், தேவன் மன்னிப்பார் என்றும் அவர்கள் கூட்டிச் சொல்கிறார்கள். ஆயினும், நம் பாவங்கள் கிறிஸ்து மூலமாக மன்னிக்கப்படுகிறது என்பதற்காக பாவத்தின் கோரத்தன்மையை நாம் மறந்துவிடக்கூடாது. அதைப் போலவே, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காகச் செலுத்திய தொகையை நாம் அலட்சியப்படுத்தக்கூடாது. அதே வேளையில் தேவன் முழுமையான கீழ்ப்படிதலில் விருப்பமுடையவராக இல்லை என்றும் நினைத்து விடக்கூடாது. நம் சமுதாயத்தின் மீது சோககரமான விமர்சனம் என்ன வென்றால் கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கைக்கும், கிறிஸ்தவர்களல்லாதவர்களுடைய வாழ்க்கைக்கும் கொஞ்சம் தான் வித்தியாசம் இருக்கிறது என்பதுதான்.

**தாழ்மையுள்ள நொறுங்குண்ட இருதயம்தான் தேவனுடைய எதிர்பார்ப்பு**

தாழ்மையுள்ள நொறுங்குண்ட இருதயம்தமானது தேவனுடைய எதிர்பார்ப்புக்குத்தக்கதாக வாழத்தவறிவிட்டதைக் குறித்து வேதனை அடைந்து, ஆழமாக அதை உணரக்கூடியதாகக் காணப்படும். தேவன் தம்முடைய எதிர்பார்ப்பின்படி தம்முடைய பிள்ளைகள் வாழவேண்டும் என்று விரும்புகிறார். இயேசு பேதுருவைப் பார்த்து நீ என்னை மறுதலிப்பாய் என்று சொன்ன சிலமணிநேரத்திற்குப் பிறகு இயேசு முன்னறிவித்தபடியே பேதுரு தன்னுடைய செயலை நியாயப்படுத்த முயற்சி செய்யவில்லை அல்லது அது உண்மையிலேயே தன்னுடைய தவறல்ல என்று நினைக்கவில்லை. பேதுரு வெளியே போய் மனங்கசந்து அழுததாக மத்தேயு 26 : 75 சொல்கிறது. அப் 8 ஆம் அதிகாரத்தில் மாயவித்தைக்காரனாகிய சீமோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷனுடைய மனமாற்ற சம்பவத்தை நாம் வாசிக்கிறோம். அவன் மனமாற்றமடைந்த உடனே, பேதுரு தன்னுடைய கைகளை மற்றவர்கள் மேல் வைத்ததினால் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டது போல் நான் எவன் மேல் என் கைகளை வைக்கிறேனோ அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகரத்தைக் கொடுக்க வேண்டும் என அப்போஸ்தலர்களிடத்தில் சீமோன் பணத்தைக் கொண்டு வந்து கேட்டான். 22 ஆம் வசனத்தில் பேதுரு சீமோனைப்பார்த்து **ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக் கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்** என்று சொன்னார். சீமோன் தன்னுடைய பாவத்தைக் குறைக்க அநேக சாக்குபோக்குகளைச் சொல்லியிருக்க முடிந்திருக்கும். ஏனென்றால், அவர் குறுகிய காலமாகத்தான் கிறிஸ்தவராக இருந்தார். ஆயினும், சீமோன் தன்னுடைய குற்றத்தை நியாயப்படுத்த முயற்சி செய்யவில்லை. அவர் இப்படியாக கெஞ்சிக்கேட்கிறார். **நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள்** என்றான் (அப் 8 : 24).

இன்றைக்கும் சபையில் தேவனுடைய வார்த்தைகளுக்கு நடுங்குகிற அநேகர் தேவைப்படுகிறார்கள். தேவன் எப்படி விரும்புகிறாரோ அதற்கேற்ப தங்கள் வாழ்க்கையை மாற்றுகிற ஊழியக்காரர்கள் தேவைப்படுகிறார்கள். மேலும், சபையில் பாவ உலையில் சிக்கித்தவிக்கும் அங்கத்தினர்கள் சாக்குபோக்குச் சொல்லாமல், தங்கள் செயலை நியாயப்படுத்த முயற்சி செய்யாமல் உண்மையான மனந்திரும்புதலுடன், தேவனிடமும், மற்றவர்களிடமும் மன்னிப்புக் கேட்கிறவர்களாயிருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களைத் தான் தேவன் ஆசீர்வதிப்பார். ●

# ஏலியின் குமாரர்கள்

Bro. MAX PATTERJON

ஏலி பதினைந்து நியாயாதிபதிகளில் பதினான்காவது நியாதிபதியாக இருந்தார். ஏலியின் குமாரர்களின் சுபாவத்தை 1 சாமுவேல் புத்தகத்தின் இரண்டு, மூன்று அதிகாரங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. இவர்கள் பேலியாளின் மக்களாயிருந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. பேலியாள் என்பதற்கு மதிப்பற்றது என்று பொருள்.

**ஏலியின் குமாரர் கர்த்தரை அறியவில்லை (2:12).**

இயேசு கிறிஸ்து யோவான் 7:17ல் இப்படியாகச் சொல்கிறார். அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனே என்று அறிந்து கொள்ளுவான். இந்த சித்தத்தை பிள்ளைகளுடைய மனதிலே புகுந்து அவர்களை அறியச் செய்வது பெற்றோர்களுடைய பொறுப்பாயிருக்கிறது ( நீதிமொழிகள் 22:6 ). ஒருவர் சத்தியத்தை அறியவில்லையென்றால் எப்படி விடுதலையாக்கப்பட முடியும்? ஏலியின் குமாரர் கர்த்தரை அறியாதபடியினால் துக்கப்படும்படியான பாவத்தைச் செய்தார்கள்.

**ஏலியின் குமாரர் கர்த்தருடைய பலியை அவமதித்தார்கள் ( 2:13-17 )**

வேதாகமத்தில் வேறு சிலரும் தேவனுடைய ஆராதனையை லேசாக எடுத்திருக்கிறார்கள்; ஆதியாகமம் நான்காம் அதிகாரத்தில் காயீன், லேவியராகமம் பத்தாம் அதிகாரத்தில் நாதாபும், அபியூவும். ஒருவர் தேவனையோ, தேவனுடைய சித்தத்தையோ அறியவில்லையென்றால் அப்படிப்பட்டவன் தன் பார்வைக்கு சரியானபடி பெரும்பாலும் செய்கிறான் (நியாதிபதிகள் 17:6).

**ஏலியின் குமாரர் ஒழுக்கக்கேடானவர்கள் ( 2:22 ).**

வெளிப்படையாகவே அவர்களுக்கு இச்சையடக்கத்தைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் மாம்ச இச்சைகளுக்கு அடிபணிந்து பாலியல் குற்றங்களில் ஈடுபட்டார்கள். சிலர், இவர்கள் விக்கிரக ஆராதனையோடு சம்மந்தப்பட்ட காமக்களியாட்டுகளில் ஈடுபட்டதாக நம்புகிறார்கள். வெயிப்படையாகவே, ஏலியின் குமாரர் முற்றிலுமாகவே பத்துக் கட்டளைகளை மறந்துவிட்டார்கள். நாமும் நம்முடைய பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்க்கவில்லை என்றால் (எபேசியர் 6:4 ) நாம் நம்முடைய பிள்ளைகளை தேவனுக்கு மேலாக கனப்படுத்துகிறோம்(2:29). அப்படியிராமல், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கும்போது பிள்ளைகள் தங்கள் தாயையும் தகப்பனையும் கனப்படுத்துவார்கள். ●